# தெஹியோவிட்ட பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 யூன் 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தெஹியோவிட்ட பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தெஹியோவிட்ட பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,378,816 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,866,868 ஆக இருந்தது

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

இரண்டு வங்கிக் கணக்குகளின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரித்தலில் நீண்ட தாமதமொன்று காணப்பட்டது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,242 | 2,234 | 1,008 |
| (ii) | வாடகை | 7,083 | 4,179 | 2,904 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 840 | 771 | 69 |
| (iv) | ஏனைய வருமானம் | 31,488 | 21,500 | 9,938 |

**2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,451,336 தொகையான நீதிமன்றத் தண்டப் பணம் கிடைக்க வேண்டியிருந்தது.

## 2.4 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,924,905 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,847,955 ஆக இருந்தது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2011 மே 30 ஆந் திகதிய 468 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச் சீட்டின் மூலம் ரூபா 48,695 தொகை மின்சார உபகரணங்களின் கொள்வனவிற்காக செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2011 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை உரிய பொருட்கள் களஞ்சியத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

ரூபா 491,380 தொகை செலவின் கீழ் மானியங்கம வெஹெரகல சுற்றுலா நிலையத்திற்கான உட் செல்லும் வீதியினை நிர்மாணிக்கும் போது படிக்காட்டுடன் இரு மருங்கிலும் நிறுத்தப்பட்டுள்ள சுவர் 1.2.4 கொங்கிரீட் கலவைக்காக 6”X9” அளவில் கபொக் கல் இடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.